மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஒ) உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அரசினர் சட்ட முன் வடிவுகள்

(திரு. தா. வீராசாமி)

"1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கு விடுதிகளின் ஆடம்பரப் பொருட்கள் மீதானவரி (திருத்த) சட்ட முன் வடிவு சட்ட மன்றப் பேரவை கூட்ட முன்வடிவு எண் 60/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

6. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1986 வரைவு அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானங்கள் இரண்டும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானங்களை மொழிகிறேன்:

(1) தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின்வரும் வரைவு அறிக்கை மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்பட வேண்டும்.

வரைவுத் தீர்மானம்

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கும் பின் வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்பளிக்கப்பட வேண்டும்.

அறிவிக்கை

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு சூலை 8 ஆம நாள் வெளியிடப்பட்ட அரசிதழின் பக்கம் 435, பகுதி II, பிரிவு-2இல் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டு